# தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 கீழ் தகவல் கோரும் மனு

அனுப்புநர்

ப.கந்தசாமி ,
107 நடுத்தெரு,
சின்ன பாலம் பாக்கம் ,
வேலூர் மாவட்டம் 632 113

5156

பெறுநர்

பொதுத் தகவல் வழங்கும் அலுவலர் அவர்கள் ,
முதன்மை கல்வி அலுவலகம்,
வேலூர் மாவட்டம் 632 009

மதிப்பிற்குரிய ஐயா வணக்கம் !

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2015 ன் படி கீழ்கண்ட தகவல்களை அளிக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

1. தமிழக அரசின் பள்ளி கல்வித்துறையின் கீழ் இயங்கும் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் தங்களுக்குரிய பாடத்தில் வாரத்திற்கு குறைந்தபட்சம் எத்தனை பாட வேளைகள் பாடம் எடுக்கவேண்டும் (VE , MI, நூலகம் நீங்கலாக ) என்ற தகவல் வேண்டப்படுகிறது .
2. குறைந்த பட்சம் எடுக்கவேண்டிய பாடவேலைகளுக்குக் குறைவாக 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பாடம் எடுக்கும் போது மீதம் உள்ள பாடவேளைகளை கீழ் வகுப்புகளில் ( 9,8,7,6 ஆம் வகுப்புகள் ) பாடம் எடுக்க வேண்டுமா அல்லது அருகில் உள்ள பாட ஆசிரியர் தேவைப்படும் அரசு மேல்லைப் பள்ளிகளுக்கு மாற்றுபணி செல்ல வேண்டுமா என்பதின் தகவல் கோரப்படுகிறது . இவ்வாறு குறைந்த பட்சம் பாடம் எடுக்காத முதுகலை ஆசிரியர்களுக்கு தணிக்கையின் போது பாடவேளை விகிதாச்சார அடிப்படையின் கீழ் அவர்களுடைய ஊதியத்தில் பிடித்தம் செய்து அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டுமா ? என்பதற்கான தகவல் வேண்டப்படுகிறது . அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இது பொருந்துமா ? என்ற தகவல் கோரப்படுகிறது .

3. அரசு மேல் நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள வகுப்புகளில் மாணவர் எண்ணிக்கை 10 க்கும் குறைவாக உள்ள மாணவர்களை ( தமிழ் வழி மற்றும் ஆங்கிலம் வழி ) அருகில் உள்ள அரசு நடுநிலை , உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமா ? அல்லது அதற்கென பட்டதாரி ஆசிரியர்கள் ஒதுக்கப்பட்டு பாடவேளைகள் தனித்தனியாக கணக்கில் கொள்ளப்படுமா என்பதற்கான தகவல் கோரப்படுகிறது .

4. தமிழக அரசின் பள்ளி கல்வித்துறையின் கீழ் இயங்கும் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் எத்தனை மாணவர்கள் இருந்தால் உதவித்தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படலாம் . குறைந்த மாணவர்கள் எண்ணிக்கை உள்ள பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களுக்கு உதவும் போர்வையில் உதவி தலைமை ஆசிரியர்களாக ஆவர்த்தனம் செய்யும் முதுகலை / பட்டதாரி ஆசிரியர்கள் வாரத்திற்கு எத்தனை பாடவேளைகள் மற்றும் பாடங்கள் நடத்தவேண்டும் .

5. ஏற்கனவே பள்ளிக் கல்வித்துறையில் உள்ள ஆணைகளுக்கு உட்படாமல் குறைந்த பாடங்கள் மற்றும் பாடவேளை எடுத்துக்கொண்டிருக்கும் முதுகலை / பட்டதாரி உதவி தலைமை ஆசிரியர்களின் ஊதியம் ( ஜீன் 2023 முதல் தற்போது வரை ) பாடவேளை விகிதாச்சார அடிப்படையில் ஊதியம் பிடித்தம் செய்யப்பட்டு உடனடியாக அரசுக் கணக்கில் செலுத்தப்படுமா என்பதற்கான விவரம் கோரப்படுகிறது .

மேற்கண்ட வினாக்களுக்கான தகவல்கள் பெறுதல் வேண்டி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களை அனுப்பி வைக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் .

இப்படிக்கு

F. Kandusami